**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 824/2023</u>**

**<u>வழக்கு சாட்சி PW-6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பார்வதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரலிங்கம் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 22nd, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பை கவனித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சிகள் சாஸ்தா, முருகன் ஆகியோர்கள் எனது மகன்கள். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். கிழக்கே வைத்து சாமியும், எனது மகனும் சண்டை போட்டதாக சொன்னார்கள். எனது கணவர், எனது மகன் சாஸ்தாவையும், முருகன் என்பவர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். நான் தென்காசி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது சாஸ்தாவிற்கு நெஞ்சு பகுதியில் கத்தியால் குத்திய காயம் இருந்தது. முருகனுக்கு லேசாக நெற்றியில் காயம் இருந்தது. எனது மகனிடம் கேட்டபோது எதிரி கத்தியால் காயம் ஏற்படுத்தியதாக கூறினார். வழக்கு பற்றி வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 18.09.2022ம் தேதி, மாலை 05.10 மணிக்கு எதிரி சாமியின் வீட்டிற்கு சென்று எனது மகன்கள் சம்பள பாக்கியை கேட்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது நானும், பின்னால் சென்று பார்த்தபோது எதிரி எனது மகன்களை அசிங்கமாக பேசி கத்திரிப்பானை எடுத்து கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் மார்பிலும், கன்னத்திலும் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அதே கத்திரிப்பானால முருகனை நெற்றியில் குத்தினார் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது மகன்களை தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:30:01 +0530